# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

C 8064801

1. District : மாவட்டம் திருநெல்வேலி PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு Year: ஆண்டு 2019 FIR No : மு.த.அ. எண் 10/2019 Date: நாள் 02.07.2019

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: கு.வி.மு.ச. Sections பிரிவுகள்: 102

(iii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as Amended Sections பிரிவுகள்: 7

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும் பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 31.10.2018 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.00 hrs Time to : நேரம் வரை 19.10 hrs

(b) Information Received at PS, Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.10.2018 Time : நேரம் 23.45 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மதிதா இந்து கல்லூரி பஸ்நிறுத்தம் அருகில் பேட்டை, 15 கி.மீ. மேற்கு.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.M.ராஜு. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.அ.பரமசிவப்பன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15.09.1962 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம் திருநெல்வேலி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.N.ஜோதிபாசு, வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு), திருநெல்வேலி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை. உரிய அனுமதி பெற்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். நான் இன்று 02.07.2019 ம் தேதி 15.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும்போது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குனரக குறிப்பாணை எண் SC No.40194/2018/AGRI/TI நாள் 24.06.2019ன்படி திருநெல்வேலி தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குனர் திரு.N.ஜோதிபாசு என்பவர் மீது திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ராஜு என்பவர் கொடுத்த 31.10.2018 நாளிட்ட புகார் மனு தொடர்பாக துறை அனுமதி பெற்று இன்று 02.07.2019ம் தேதி மாலை 15.00 மணிக்கு இந்த வழக்கு பதிவு செய்யப்படுகிறது. 31.10.2018ம் தேதி 23.45 மணிக்கு I.சுப்பையா, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி ஆகிய நான் பணியில் இருக்கும்போது திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.ராஜு என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள செயல்முறை நடவடிக்கைகள் நாள் 31.10.2018 மற்றும் செயல்முறை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.25,510/- ஆகியவற்றை கொடுத்து எதிரி திரு.N.ஜோதிபாசு மீது நடவடிக்கை எடுக்க கொடுத்தார். அவர் ஒப்படைத்த ரூ.25,510/-ஐ உடனடியாக திருநெல்வேலி மாவட்ட கருவூலத்தில் ஒப்படைத்து அத்தாட்சி பெறப்பட்டது. அடுத்ததாக எதிரி திரு.N.ஜோதிபாசு மீது வழக்கு தொடர்வதற்காக அவர் பணியாற்றிய வேளாண்மை துறையில் முன் அனுமதி பெறுவதற்காக சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குனர் அவர்கள் மூலமாக விழிப்பு ஆணையாளர்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed [illegible] Rank [illegible] to take up the Investigation / Refused Investigation / transferred to PS...[illegible]...on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

2.7.19.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Name: பெயர் ...I. Subbaiah...
Rank: நிலை ...DSP, V&AC... No. எண் ........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
02/7/19 — 17.00 hrs.

(Vigilance Commissioner) அவர்களுக்கு அனுப்பப்பட்டு, விழிப்பு ஆணையாளர் மூலமாக சென்னை ஆணையாளர், வேளாண் உற்பத்தி மற்றும் தமிழக அரசின் வேளாண்மை முதன்மை செயலாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு சென்னை ஆணையாளர், வேளாண் உற்பத்தி மற்றும் தமிழக அரசின் வேளாண்மை முதன்மை செயலாளர் அவர்கள் உத்தரவு G.O (D) No.45 வேளாண் (AA2) துறை நாள் 13.03.2019ன்படி எதிரி மீது வழக்கு தொடர அனுமதி அளித்த உத்தரவு கிடைத்தது. திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.ராஜு அவர்கள் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனு மற்றும் செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு. அனுப்புனர் M.ராஜு, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி. பெறுனர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. அய்யா, பொருள்: திருநெல்வேலி வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) என்பவர் பயன்படுத்தி வரும் TN 72 G 1132 என்ற அரசு வாகனத்தை பேட்டை இந்துக்கல்லூரி பஸ் நிறுத்தம் அருகே வைத்து திடீர் இணை ஆய்வு செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. திருநெல்வேலி தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குனர், அம்பாசமுத்திரம் மற்றும் சேரன்மகாதேவி பகுதிகளில் உள்ள உரம் மற்றும் விதைகள் விற்பனை கடை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு நிறுவனங்களில் தணிக்கை செய்து மாமூல் வாங்குவதாக 31.10.2018ம் தேதி மாலை 16.00 மணிக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் என்னுடைய தலைமையில் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.I.சுப்பையா மற்றும் போலீசாருடன் சேர்ந்து திருநெல்வேலி பேட்டை இந்துக்கல்லூரி பஸ் நிறுத்தம் அருகே உள்ள இரும்பு தடுப்புகள் வைத்து தற்காலிக வாகன தணிக்கை நடைபெறும் இடத்தில் வைத்து திருநெல்வேலி வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) அவர்கள் பயன்படுத்தி வரும் TN 72 G 1132 என்ற அரசு வாகனத்தை திடீர் தணிக்கை செய்து அதன் தொடர்ச்சியாக பேட்டை தீப்பணைப்பு மற்றும் மீட்புபணிகள் நிலையத்தில் வைத்து இரவு 19.10 மணி முதல் இரவு 23.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி திருநெல்வேலி வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) திரு.N.ஜோதிபாசு என்பவரிடமிருந்து பணம் ரூ.25,510/- கைப்பற்றப்பட்டது. இந்த பணத்திற்கு தகுந்த

முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக சுருட்டி வைத்தும் மற்றும் பிரவுண் நிற கலர் கவரிலும் திரு.N.ஜோதிபாசு மேற்கண்ட பணத்தை வைத்திருந்ததால் கையூட்டாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கைகள் 31.10.2018 இரவு 19.45 மணிக்கு ஆரம்பித்து இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி செயல்முறை நடவடிக்கையை இத்துடன் இணைத்து மேற்படி பணம் கைப்பற்றப்பட்ட நபரான திரு.N.ஜோதிபாசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றப்பட்ட பணத்துடன் தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம். (M.ராஜு"), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி. 31.10.2018 ம் தேதி பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தில் வைத்து திருநெல்வேலி வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) அரசு வாகனம் TN 72 G 1132 வாகனத்தை திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.ராஜு" அவர்கள் திடீர் தணிக்கை செய்தது சம்மந்தமான செயல்முறை ஆணை. முன்னிலை : 1).திரு.M.ராஜு", திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. 2).திரு.I.சுப்பையா, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. 3).திரு.R.ஆதீஸ், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. இன்று 31.10.2018-ம் தேதி மாலை சுமார் 16.00 மணிக்கு கிடைத்த திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) தனியார் உரம் மற்றும் விதைகள் விற்பனை கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு நிறுவனங்களில் தணிக்கை செய்து கையூட்டாக பணம் பெற்றுக்கொள்வதாக வந்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.ராஜு" அவர்கள் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.I.சுப்பையா மற்றும் காவல் ஆய்வாளர் திரு.R.ஆதீஸ் மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து சுமார் 17.00 மணியளவில் புறப்பட்டு உரக்கடைகள் அதிகமாக இருக்கக்கூடிய திருநெல்வேலி டவுண் பகுதிகளில் ரோந்து செய்து திருநெல்வேலி பேட்டை இந்து கல்லூரி பேருந்து நிறுத்தம் அருகே உள்ள இரும்பு தடுப்புகள் வைத்து தற்காலிக வாகன தணிக்கை நடைபெறும் இடத்தில் 19.10 மணிக்கு திரு.M.ராஜு"

அவர்கள் தலைமையில் வந்த பொழுது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த வாகனத்தின் முன்பக்கம் தமிழ்நாடு அரசு என்று எழுதியிருந்த TN 72 G 1132 என்ற அரக்கு நிற பொலிரோ ஜீப்பை நிறுத்தி வலது முன்பக்கத்தில் அமர்ந்திருந்தவரை வினவியபோது அவர் தான் திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) என்றும், எங்கள் அலுவல் நிமித்தம் காரணமாக பல்வேறு இடங்களில் தணிக்கை செய்து வருவதாக கூறினார். ஏற்கனவே அவர் மீது கிடைத்த ரகசிய தகவலின்டி சந்தேகத்தின்பேரில் அவர் ஒரு அரசு ஊழியர் என்ற காரணத்தினால் அவரையும், அவர் வந்த வாகனம் அரசு வாகனம் என்ற காரணத்தினால் TN 72 G 1132 என்ற எண் கொண்ட அரசு வாகனத்தையும் மற்றும் அந்த வாகனத்தில் இருந்த அரசு ஊழியர்களையும் சோதனை செய்யும் பொருட்டு அந்த இடத்தில் வாகனத்தின் உள்ளே சோதனை செய்வதற்கு போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினால் அந்த இடத்தில் இருந்து 50 மீட்டர் கிழக்கே ரோட்டின் வடபுறம் அமைந்துள்ள பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் அலுவலக வளாகத்திற்கு மேற்படி வாகனம் TN 72 G 1132 மற்றும் அதில் இருந்த அரசு ஊழியர்களையும் அழைத்து வந்து அங்கிருந்த பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலைய பொறுப்பு அலுவலரிடம் நாங்கள் இன்னாரென்று அறிமுகப்படுத்திக்கொண்டு அந்த அலுவலக மின் விளக்கின் வெளிச்சத்தில் வைத்து திருநெல்வேலி வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) திரு.N.ஜோதிபாசு அவர்களை வாகனத்தில் இருந்து இறக்கி அவரை சந்தேகத்தின்பேரில் சோதனை செய்த போது அவர் முன் சட்டை பாக்கெட்டில் இருந்து பர்ஸ் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.3,000/- (2000X1=2,000, 500X2=1000) இருந்தது. அது தனது கை செலவுக்காக வைத்திருந்ததாக திரு.ஜோதிபாசு கூறியதால் மேற்படி பர்சுடன் அந்த பணம் ரூ.3,000/- திரும்ப கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் அவரிடம் வேறு பணம் வைத்திருக்கீறிர்களா என்று கேட்டபோழுது அவர் தன்னிடம் வேறு பணம் இல்லை என்று கூறினார். அவரை சோதனை செய்த போது அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் ஒரு பிரவுண் கவரில் ரூ.3,000/- (500X6=3000) பணம் இருந்தது. அதேபோல் அதே பேண்ட் பாக்கெட்டில் ஒரு சுருட்டு சுருட்டி இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.5,000/- (2000X1=2,000, 500X6=3,000) இருந்தது. இடது பக்க பாக்கெட்டில் சோதனை செய்த போது அதில் சுருட்டி சுருட்டி பணம் ரூ.4,000/- (2000X1=2,000, 500X4=2000) இருந்தது. அவரது பின்பக்க பேண்ட் பாக்கெட்டை சோதனை செய்தபோது அதில் ரூ.13,510/- (2000X4=8,000, 500X10=5000, 100X5=500,

10X1=10) இருந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு திரு.ஜோதிபாசு அவர்களிடம் இருந்து காணப்பட்ட ரூ.25,510/-ற்கு தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், மேற்படி தனித்தனியாக சுருட்டி மற்றும் பிரவுன் கலர் கவரிலும் பணம் இருந்த காரணத்தினாலும் திரு.ஜோதிபாசு உர கடை உரிமையாளர்களிடம் கையூட்டாக பெற்றிருக்ககூடும் என்ற சந்தேகத்தின்பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் அவருடன் இருந்த பெயர் பதவி கேட்டு தெரிந்து கொண்ட பாப்பாக்குடி வேளாண்மை அலுவலர் திரு.வேலுச்சாமி என்பவரை சோதனை செய்தபோது அவர் பேண்ட் பாக்கெட்டில் ரூ.1,550/- (500X3=1,500, 50X1=50) வைத்திருந்தார். அந்த பணத்தை பற்றி கேட்டபொழுது கை செலவுக்காக தனது வீட்டில் இருந்து கொண்டு வந்தது என்று கூறியதால் மேற்படி பணம் அவரிடம் கொடுக்கப்பட்டது. பெயர் பதவி கேட்டு தெரிந்து கொண்ட தேனி மாவட்டம் சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அலுவலர் திரு.மு.இளம்பூரனார் என்பரை சோதனை செய்தபொழுது அவரது வலதுபுற பேண்ட் பாக்கெட்டில் ரூ.2,230/- (500X4=2,000, 200X1=200, 20X1=20, 10X1=10) வைத்திருந்தார். அந்த பணத்தை பற்றியும் இங்கு வந்தது பற்றியும் கேட்டபொழுது தேனி மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர் அலுவலக உத்தரவுப்படி உரம் மற்றும் விதை தரக்கட்டுப்பாடு ஆய்விற்காக மற்ற மாவட்டங்களுக்கு சென்று அங்குள்ள உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அவர்கள் காண்பிக்கக்கூடிய கடை மற்றும் நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளுவதற்கு உத்தரவு வந்த காரணத்தினால் கடந்த இரு தினங்களாக உதவி இயக்குனர் திரு.ஜோதிபாசு அவர்களுடன் வந்ததாக கூறினார். மேலும் தன்னுடைய கை செலவுக்காக பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றிய எல்கைக்குட்பட்ட முக்கூடலில் உள்ள SBI ATM-ல் இன்று மதியம் ரூ.2,000/- எடுத்ததாகவும், அதற்கான குறுஞ்செய்தியை அவ்ருடைய கைபேசியில் காண்பித்தார். எனவே அந்த பணத்திற்குரிய தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் பதவி பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.முருகேசன் என்பவரை விசாரித்த பொழுது அவர் தேனி மாவட்டம் கம்பம் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அலுவலராக பணிபுரிவதாகவும், மேற்சொன்ன இளம்பூரனார் என்பவர் சொன்ன கருத்தினை ஒத்து அவர் சொன்னபடியே உதவி இயக்குனர் திரு.ஜோதி பாசு காண்பிக்கக்கூடிய உர கடை மற்றும் நிறுவனங்களில் ஆய்வு செய்ய வந்திருப்பதாக சொன்னார். அவரை சோதனை செய்தபோது அவரது இடதுபுற பேண்ட் பாக்கெட்டில் ரூ.1,710/- (500X3=1,500, 100X2=200, 10X1=10) வைத்திருந்தார். மேற்படி பணத்தினை பற்றி அவரிடம்

கேட்டபொழுது அவர் வெளி மாவட்டத்தில் இருந்து பணிக்கு வந்திருந்த காரணத்தினால் கை செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த வாகனத்தில் தினக்கூலி அடிப்படையில் வாகன ஓட்டுனராக இருந்த திரு.A.சோபிதராஜ் என்பவரை சோதனை செய்தபோது அவர் இடது முன்பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.1,100/- (500X1=500, 100X6=600) வைத்திருந்தார். அவரிடம் மேற்படி பணத்தை பற்றிய வினவிய போது தன் ஆங்காங்கே உதவி இயக்குனருடன் செல்ல வேண்டியிருப்பதால் சாப்பாடு செலவுக்காகவும், கை செலவுக்காக வைத்திருப்பதாக கூறினார். எனவே மேற்படி பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் ஓட்டுனர் திரு.சோபித ராஜிடம் அவர் ஓட்டி வந்த TN 72 G 1132 வாகனத்தில் லாக் புக் பற்றி கேட்டபொழுது அது மாதத்திற்கு ஒருமுறை எழுதுவதாகவும், அலுவலகத்தில் இருப்பதாக கூறினார். உதவி இயக்குனர் திரு.ஜோதிபாசு அவர்களிடம் லாக் புக் பற்றி கேட்டபொழுது சரிவர பதில் சொல்லவில்லை. மேலும் திரு.ஜோதிபாசு அவர்களிடம் 30.10.2018 மற்றும் 31.10.2018 ஆகிய இரு தினங்களில் வெளிமாவட்டங்களில் இருந்து வந்திருந்த குழுவினருடன் ஆய்வு செய்த கடைகள் மற்றும் நிறுவனங்கள் பற்றி விபரங்களை கேட்டபொழுது அவர் 30.10.2018ம் தேதி காலை சுமார் 08.45 மணியளவில் பாளை பஸ்நிலையம் அருகில் உள்ள தனது அரசு குடியிருப்பில் இருந்து மேற்படி அரசு வாகனம் TN 72 G 1132-ல் தானும், வாகன ஓட்டுனர் திரு.சோபிதராஜ் என்பவருடன் கிளம்பி சங்கரன்கோவில் சென்று அங்கு மேற்சொன்ன தேனி மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் திரு.இளம்பூரனார், திரு.A.முருகேசன் கீழ்கண்ட ஊர்களில் உள்ள உர மற்றும் விதை விற்பனை செய்யும் கடை மற்றும் நிறுவனங்களை ஆய்வு செய்தார்கள். அவர்களுடன் தானும் உடனிருந்ததாக தெரிவித்தார். அதன் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1. | சங்கரன்கோவில் | ரவி டிரேடர்ஸ் |
| 2. | | ராம்சன் அக்ரோ ஏஜென்சி |
| 3. | | சங்கரன்கோவில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். எண்:A503 |
| 4. | வாசுதேவநல்லூர் | சீனிவாசா டிரேடர்ஸ், சிவகிரி. |
| 5. | | ஸ்ரீமூர்த்தி டிரேடர்ஸ், சிவகிரி. |
| 6. | | TNSPL 119 சிவகிரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி. |

| | | |
|---|---|---|
| 7. | செங்கோட்டை | தனலட்சுமி டிரேடர்ஸ், அச்சன்புதூர். |
| 8. | | வசந்த் அக்ரோ ஏஜென்சி, செங்கோட்டை. |
| 9. | | இலத்தூர் வேளாண்மை கூட்டுறவு சங்கம். |

அதன்பின்னர் 30.10.2018ம் தேதி இரவு குற்றாலத்தில் உள்ள குற்றாலம் ஹெரிடேஜ் என்ற விடுதியில் தங்கியதாக கூறினார். இன்று 31.10.2018ம் தேதி அதற்கான கட்டணம் ரூ.6,357/-ஐ தான் செலுத்தியதாக திரு.ஜோதிபாசு கூறி அதற்கான ரசீதை ஆஜர் செய்தார். தான் தங்கியிருந்த காட்டேஜ் அறை எண் 109 ஆகும். தேனியில் இருந்து ஆய்வுக்கு வந்திருந்த மற்றொரு குழுவில் இருந்த திரு.மணிகண்ட பிரசன்னா என்பவர் பெயரில்தான் அந்த அறை புக் செய்யப்பட்டது. மேலும் அந்த அறையில் தன்னுடன் திரு.மணிகண்ட பிரசன்னா, மேற்சொன்ன திரு.A.முருகேசன், திரு.இளம்பூரணர் மற்றும் தேனி ஆண்டிபட்டி உதவி இயக்குனர் திரு.இராஜசேகர் மற்றும் வாசுதேவநல்லூர் வேளாண்மை அலுவலர் திரு.மணிகண்டன் என்பவரும் தங்கியிருந்ததாக கூறினார்.

31.10.2018ம் தேதி காலையில் தான் மேற்சொன்ன அரசு வாகனத்தில் வெளிமாவட்ட ஆய்வுக்குழுவினருடன் தனது வாகனத்தில் குற்றாலத்தில் இருந்து கிளம்பி கீழ்கண்ட உரக்கடை மற்றும் கூட்டுறவு கடன் சங்க சார்ந்த குடோன் மற்றும் அலுவலகத்தை ஆய்வு செய்தார்கள். அவர்களுடன் தானும் உடன் இருந்ததாக கூறினார். அதன் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1. | கீழப்பாவூர் | 0.233 கீழப்பாவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். |
| 2. | | ராமகிருஷ்ணன் ஸ்டோர், கீழப்பாவூர். |
| 3 | | N.R.N.முத்தையா சன்ஸ், கீழப்பாவூர் |
| 4. | | 0.280 சுரண்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். |
| 5. | | கந்தசாமி ஏஜென்சிஸ். சுரண்டை |

| | | |
|---|---|---|
| 6. | | |
| 7. | பாப்பாக்குடி | நடராஜா ஸ்டோர், முக்கூடல். |
| | | VPR Agri clinic and Consultancy service, Mukkudal |
| 8. | அம்பாசமுத்திரம் | முத்து ஸ்டோர், அம்பாசமுத்திரம். |
| 9 | | அய்யனார் ஸ்டோர், அம்பை |
| 10. | சேரன்மகாதேவி | அமிர்தா அக்ரி கிளினிக் மற்றும் அக்ரி பிசினெஸ் சென்டர், சேரன்மகாதேவி. |

மேலும் 30.10.2018ம் தேதியன்றும், 31.10.2018ம் தேதி அன்றும் வெளிமாவட்ட குழுவினரால் திரு.ஜோதிபாசும் உடன் இருந்து தணிக்கை செய்யப்பட்ட உரக்கடை மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் ஆய்வு செய்ததற்கான 19 தணிக்கை அறிக்கைகள் (பக்கம் 1 முதல் 208) வரை கொண்டதையும் மற்றும் குற்றாலம் ஹெரிடேஜ் தங்கும் விடுதியின் ரசீது எண் 0002449 என்பதும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் நிலையத்தில் உள்ள அலுவலக அறையில் வைத்து திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து கொண்டு வந்த மடிக்கணினியல் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (31.10.2018) இரவு 19.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. sd.(M.ராஜு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி. ஒப்பம். மற்றும் பலர்.

Sir, Received the complaint on 31.10.2018 at 23.45 hrs and got prior permission from competent authority and registered a case in Tirunelveli V&AC, Cr.No.10/2019 u/s 102 Cr.P.C and 7 of Prevention of Corruption Act 1988 as Amended in Act No.16 of 2018 on 02.07.2019 at 15.00 hrs. The original FIR was sent to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under PC Act, Tirunelveli and copies were sent to the concerned officers.

DSP V&AC TLV 2/7/19

Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption
16/53A/1, Maharaja Nagar
Tirunelveli - 5